**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF DISTRICT MUNSIF, VANDAVASI.**

| | | |
|---|---|---|
| Case No | : | அ.வ.எண். **94/2009** |
| Deposition of Witness for | : | வா.த.சா. 1 |
| Name | : | ஆசிர்வாதம் (எ) ஆசிர்பாதம் |
| Father's/Husband's Name | : | ஞானமுத்து |
| Village and Taluk | : | மோரக்கணியனூர், சேத்துப்பட்டு |
| Caste | : | -- |
| Nationality | : | இந்தியன் |
| Religion | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of the day of 13.09.2019

**முதல் விசாரணை**

இந்த வழக்கில் நான் வாதியாவேன். நான் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள சங்கதிகள் அனைத்தும் எனக்கு தெரியும். கடந்த 06.02.1931 அன்று எனது தகப்பனார் ச.எண்.66/1ல் மேல்பாதி 4-1/2 செண்ட் காலிமனை கிரையம் பெற்றது சம்மந்தமான கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 1 ஆகும். 27.01.1975 அன்று எனது தகப்பனார் எனது சகோதரர் 1ம் பிரதிவாதிக்கு ச.எண். 66/1ல் பொதுவில் 3 செண்ட் நிலம் மற்றும் பிற சொத்துக்கள் சம்மந்தமாக எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.த.சா.ஆ 2 ஆகும். 22.01.1996 அன்று எனது பெற்றோர் எனது சகோதரர் அந்தோனி சாமிக்கு ஒதுக்கப்பட்ட பாகத்தை அவர் வாரிசுகள் இல்லாமல் இறந்துபோனதால் ச.எண். 66/1ல் அவருக்கு ஒதுக்கப்பட்ட 3 செண்ட் நிலம் மற்றும் பிற சொத்துக்கள் சம்மந்தமாக எனக்கு எழுதிகொடுத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தின் அசல் வா.த.சா.ஆ 3 ஆகும். தாவா சொத்தில் உள்ள வீடு சம்மந்தமாக நான் செலுத்திய வரிக்கான ரசீது வா.த.சா.ஆ 4 ஆகும். தாவாப்படி தீர்ப்பு வழங்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

**குறுக்கு விசாரணை வேண்டுகோளின் பேரில் ஒத்திவைக்கப்படுகிறது.**